போட்டால், அதற்குப் பிறகு அதை நிரூபிக்கவேண்டும். ஆனால், எத்தகைய மத மாறுதல்கள் இருந்தாலும், அனாதைகள் கவனிப்பாரற்று கெட்டுப்போவதைவிட, சமுதாயத்திற்கு ஆபத்தை விளைவிப்பதைவிட, அவர்களை யாராவது பாதுகாத்தால் அது முற்றிலும் வரவேற்கப்பட வேண்டியது என்று நான் சொல்வேன்.

SRI M. JAGANNATHAN : ஆண்களுக்கான அனாதை இல்லங்களுக்குக் கொடுக்கப்படும் மானியத்தைவிட, பெண்களுக்கான அனாதை இல்லங்களுக்கு அதிகமான மான்யம் ஒதுக்குவதற்கு சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படி ஒன்றும் அவசியம் இருப்பதாக சர்க்கார் கருதவில்லை.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : எங்கே அதிகமாக குழந்தைகள் விடுதிகள் தேவை இருக்கிறதென்றால் பிற்போக்கான இடங்களிலும், ஏழைகளாக இருப்பவர்களுடைய வட்டாரங்களிலும்தான். அப்படிப்பட்ட பிற்போக்கான வட்டாரங்களிலும், ஏழைகளே பெரும்பாலும் வசிக்கக்கூடிய இடங்களிலும் இப்படிப்பட்ட இல்லங்கள் வைப்பதற்கு முயற்சி எடுப்பதே இல்லை. ஆகவே, அப்பேர்ப்பட்ட இடங்களிலேயும், ஹரிஜனங்கள் வாழக்கூடிய பகுதிகளிலேயும் இப்படிப்பட்ட விடுதிகளை சர்க்கார் ஆரம்பிப்பார்களா ? பிற்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதிகளிலேயும், ஜனங்களுடைய ஆர்வம் இல்லாத பகுதிகளிலேயும் மட்டுமாவது சர்க்கார் இந்த விடுதிகளை ஆரம்பிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் சிறந்த ஸ்தாபனங்களை மிகுந்த ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் நடத்திக்கொண்டு வருகிறார்கள். அம்மாதிரி மற்றவர்களுக்கு முடியவில்லையென்றாலும், கனம் அங்கத்தினர் அவர்களுக்கு இன்னும் எவ்வளவோ ஆசை உண்டு, இன்னும் பல ஸ்தாபனங்களை ஆரம்பிப்பதிலே. இப்படிப்பட்டவைகளை நடத்துவதைத் தனியார் துறையிலே விடவேண்டும் என்பதும், அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்பதும் தான் அரசாங்கத்தினுடைய உத்தேசம்.

SRI M. S. SELVARAJAN : நான் முன்பு கேட்டபோது, எந்த அடிப்படையிலே அங்கீகாரம் அளிக்கப்படுகிறது, எந்த அடிப்படையிலே கிராண்டு வழங்குப்படுகிறது என்று கேட்டேன். அதை மீண்டும் கேட்பதற்கு ஆசைப்படுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்த அடிப்படையிலே கிராண்டு வழங்கப்படுகிறது என்று நான் முன்பே பதில் சொன்னேன். சாதாரணமாக ஒரு மாணவனுக்கு எட்டு ரூபாய்க்கு அதிகப்படாமல், முக்கால் பங்குசெலவுத்தொகை அளிப்பது உண்டு. மலைப்பிரதேசத்தில் 12 ரூபாய் வீதம் அளிக்கப்படுகிறது. ஸ்தாபனம் ஒழுங்காக நடைபெறுகிறது என்று மனுப் போட்டால், அதைப் பரிசீலனை செய்து அங்கீகாரம் அளிக்கப்படுகிறது.

Minimum Wages Act

* 538 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken to implement section 3 (*a*) of the Minimum Wages Act, 1948, regarding fixation of minimum wages for employment in agriculuture in the State?

THE HON. SRI R. VENKATARAMAN : As early as in 1952, the Government conducted an enquiry in 48 villages with a view to determine the low wage pockets in this State and to define legal minimum rates of wages for different categories of agricultural labour. Based on the results of the enquiry the Government published a notification in December 1952, proposing the rates of

3rd April 1958]

minimum wages to be fixed for agricultural labour and invited objections and suggestions from the public. A large number of objections both to the minimum rates of wages proposed and to the fixation of wages for agricultural labour were received and the Government felt that fixation of minimum wages for this employment would entail considerable difficulties and complexities. Finally the Government decided that the working of minimum wages in other States where they have been fixed should be examined before proceeding further. Necessary information is being collected from other States.

SRI N. K. PALANISAMI : குறைந்த பட்ச ஊதியம் ஒரே மாதிரியாக மாகாணம் பூராவும் கொண்டு வருவதில் கஷ்டம் இருக்கிறது. ஆகவே சர்க்கார் எந்தெந்த இடத்தில் கூலி நிர்ணயம் செய்ய வேண்டுமோ அங்கெல்லாம் செய்துவிட்டு செய்யமுடியாத நிலைமையுள்ள இடங்களில் இப்போது கொடுக்கப்படும் கூலியைவிட 25 சத விகிதம் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்பதாக உத்தரவு போட்டுவிட முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஆலோசனை கூறப்படுகிறது. சர்க்கார் இது விஷயமாகப் பரிசீலனை செய்யும்போது இந்த யோசனையும் கவனிக்கப்படும்.

SRI K. B. S. MANI : விவசாயிகளுக்குக் குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்வது கஷ்டமாக இருக்கிற காரணத்தினால் இன்றைய நிலையில் ஒரு தொழிலாளியின் வாழ்க்கைக்கு ஒரு நாளைக்கு இவ்வளவு கூலி அவசியமாகிறது என்று கணக்கிட்டு அதையே குறைந்த பட்ச கூலியாக நிர்ணயம் செய்துவிட முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : குறைந்த பட்ச கூலியை நிர்ணயம் செய்வது என்றால் ஒரு கமிட்டியைப் போட்டு அதன் சிபார்சுப்படி நிர்ணயிக்கவேண்டுமென்று தான் மினிமம் வேஜஸ் ஆக்டில் இருக்கிறது. ஆகவே குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்ய இங்கும் ஒரு கமிட்டி போடப்படும். அந்தச் சமயத்தில் இந்த யோசனைகளை யெல்லாம் அவர்கள் பரிசீலிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

SRI T. S. RAMASWAMY PILLAI : அந்தக் கமிட்டியை உடனடியாகப் போட அரசாங்கம் ஆலோசிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : உடனடியாக இல்லை.

SRI M. C. MUTHUKUMARASWAMY : குறைந்த பட்ச கூலியை நிர்ணயம் செய்வதற்கு மாகாணத்தில் விவசாயிகள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்கிற புள்ளிவிவரத்தை ஆராய அரசாங்கம் முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : அத்தகைய புள்ளிவிவரம் அவசியம் இல்லை என்று நினைக்கிறேன்.

SRI K. ANBAZHAGAN : குறைந்த பட்ச கூலி என்று நிர்ணயம் செய்துவிட்டால் அதிகமாகக் கூலி கொடுக்கும் இடங்களில் கூட இதனால் கூலியைக் குறைத்து விடக்கூடிய நிலைமை ஏற்படும் என்கிற கருத்தை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். குறைந்தபட்ச கூலி என்று நிர்ணயம் செய்வதனால் அதைவிட அதிகமாகக் கூலி தருவதைக் குறைக்காதவாறு அதிகமாகக் கூலி கொடுக்கும் இடங்களில், அந்தக் கூலியைக் குறைக்கக்கூடாது என்பதைத் திட்டவட்டமாக அறிவித்துவிட்டு இப்படி குறைந்த நிர்ணயம் அளவு கூலியை நிர்ணயம் செய்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் சொல்வது தான் சட்டமும் கூட. ஆனால் நடைமுறையில் அதிகமாகக் கூலி கொடுத்துக் கொண்டிருக்கும் இடங்களில் கூலியைக் குறைக்கக் கூடாது என்று சட்டமிருந்தாலும், குறைந்த பட்ச கூலியே அதிக பட்ச கூலியாக முடிந்து விடுகிறதைத்தான் பார்க்கிறோம்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : விவசாயிகளுக்குக் கூலி நிர்ணயம் செய்வதற்கு முன்னால் விவசாயிகளுடைய நிலைமையை மாத்திரம் பார்த்து கூலி நிர்ணயம் செய்யப்படுமா? அல்லது இன்றைக்கு விவசாய உற்பத்தியை கணக்கிட்டு அதிலுள்ள வருமான நிலையை அனுசரித்து கூலி நிர்ணயிக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதை நிர்ணயிப்பதற்காக ஒரு கமிட்டி போடப்படும். அதில் விவசாயத்தை நடத்துகின்றவர்கள், விவசாயத் தொழிலாளர்களாகிய இருசாராருக்கும் சம அந்தஸ்து கொடுக்கப்படும். அவ்வாறு போடப்படுகிற கமிட்டியில் வாதப் பிரதிவாதங்களை எடுத்துச் சொல்லி கூலியை நிர்ணயம் செய்ய சந்தர்ப்பம் இருக்கும்.

SRI N. MARUDACHALAM : சர்க்கார் விவசாயக் கல்லூரிகளில் உள்ள விவசாயப் பெண்களுக்காவது கூலி நிர்ணயம் செய்யப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தக் கேள்வியை எனது சகா அமைச்சரிடத்தில் கேட்கவேண்டும்.

SRI N. K. PALANISAMI : கனம் அமைச்சர் அவர்கள் 48 கிராமங்களில் பரிசீலனை செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். அங்காவது கூலி நிர்ணயம் செய்யப்பட முடியுமா? முடியாதா? பரிசீலனையின் முடிவு என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தப் பரிசீலனை அந்த கிராமங்களில் கூலி நிர்ணயம் செய்வதாகச் செய்யப்படவில்லை. ராண்டம் சாம்பில் சர்வே என்று சொல்வார்களே, அந்தப் அடிப்படையில் அந்த கிராமங்களில் என்ன கூலி கொடுக்கப்படுகிறது? அதிக பட்ச கூலி எவ்வளவு ? குறைந்த பட்ச கூலி எவ்வளவு ? குறைந்த பட்சம் எவ்வளவு கூலி கொடுப்பது நியாயம் ஆக இருக்கும் என்பது தான் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

SRI K. PERIANNAN : கூலி நிர்ணயிப்பதற்காக கமிட்டி அமைக்கப்படும் என்று சொன்னார்கள். எந்த அடிப்படையில் அமைக்கப் படும் என்று அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : விவசாயத்தை நடத்துகின்ற நிலச் சுவாந்தார்களுடைய பிரதிநிதிகள், விவசாயத் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள், இவர்களைத் தவிர இண்டிபெண்டெண்ட் மெம்பர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் அடங்கிய கமிட்டியாக இருக்கும்.

SRI S. M. ANNAMALAI : முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே இந்தக் கமிட்டி அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இன்னும் இந்தக் கமிட்டியை அமைக்க சுமார் எவ்வளவு காலம் ஆகும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : 1959-ம் வருஷம் டிசெம்பர் மாதத்திற்குள் இந்தக் கூலி நிர்ணயம் செய்ய முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

SRI N. K. PALANISAMI : பொதுவாக கூலி நிர்ணயம் என்பதற்குப்பதிலாக இன்ன இன்ன வேலைக்கு இன்ன இன்ன கூலி கொடுக்கப்படவேண்டும் என்று நிர்ணயித்துவிடுவதற்கு சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போது தான் சொன்னேன். இதைப் பற்றியெல்லாம் அந்தக் கமிட்டி பரிசீலனை செய்து நிர்ணயம் செய்ய வேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN : குறைந்த பட்ச கூலியை நிர்ணயிப்பதன் மூலமாக அதிக பட்சமாகக் கொடுக்கப்படும் கூலி குறைந்த பட்சமாகக் குறைந்துவிடும் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே குறைந்த பட்ச கூலியை நிர்ணயிப்பதன் விளைவாக தொழிலாளர்களுக்கு ஆபத்து இருக்கிறதென்பதை கனம் அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

3rd April 1958]

THE HON. SRI R. VENKATARAMAN : நான் அப்படிச் சொல்லவில்லை. குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்தால் அதுவே அதிக பட்ச கூலியாக நடைமுறையில் வந்துவிடுகிறது. அம்மாதிரி வராமல் இருப்பதற்கு ஆங்காங்கே தொழிலாளர்கள் சங்கம் இருக்க வேண்டும், கூலியைக் குறைக்காமல் இருக்கிருர்களா, குறைந்த பட்ச கூலி கொடுக்கப்படுகிறதா என்பதை யெலலாம் கண்காணிப்பாகப் பார்க்க வேண்டும். சர்க்காருக்கு எடுத்துச் சொல்லவேண்டும். அந்த நிலைமை இன்றைக்கு நம் ராஜ்யத்தில் இல்லை என்ற காரணத்திஞல் 1959-ம் வருஷம் டிசெம்பர் மாதத்திற்குள் கூலி நிர்ணயம் செய்ய முடியும் என்று எதிர்பார்ப்பதாக நான் சொன்னேன்.

Cottage and village industries

* 539 Q.—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the names of cottage and village industries for which the 24 Harijans from the Coimbatore district were given aid; and

(b) the details of aid given to them?

THE HON. SRI P. KAKKAN : (a) The following are the Cottage and Village Industries for which aid was given :—

1. Tailoring.
2. Carpentry.
3. Blacksmithy.
4. Fitting.
5. Electrical wiring.
6. Scale manufacturing.
7. Dye-making.
8. Drilling.

(b) The beneficiaries were given tools and materials relating to the trade worth Rs. 440 each.

Censorship of postal articles.

* 540 Q.—SRI A. V. P. ASAITHAMBI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the postal articles addressed to me are censored at the Triplicane (Madras-5) Post Office by Police officers; and

(b) if so, why is it done?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The Government regret they have to decline to answer the question in the public interest.

SRI K. VINAYAKAM : Do the Government think that the hon. Member who is the author of this question, is such a dangerous and revolutionary element as to endanger the safety of the State? I live in the same area as he and my tappals are not tampered with.

MR. SPEAKER : The member may put a separate question. If the Miinster wants to answer, he may do so.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : யார் யார் ஆபத்து விளைவிக்கக் கூடிய வர்கள், அவர்களால் எவ்வித ஆபத்தும் ஏற்படாமல் இருக்க என்ன என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று பரிசீலனை